27 04 2024 12 40 சனிக்கிழமை நண்பகல்

தலைப்புச் செய்திகள்-

- மக்களவைக்கு மூன்றாவது கட்டமாக அடுத்த மாதம் ஏழாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.
- தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழகத்திற்கு 682 கோடி ரூபாய் நிவாரண நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.
- இலங்கை சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் சென்னை வந்தடைந்தனர்.
- அமெரிக்கா – சீனா இடையே இருதரப்பு உறவுகள் குறித்து பெய்ஜிங்கில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.
- உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

[]<<<>>>[]

மக்களவைக்கு மூன்றாவது கட்டமாக அடுத்த மாதம் ஏழாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

அனல் பறக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி, காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, திரிணமூல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி உள்ளிட்ட தலைவர்கள் பலர் தங்களது கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

12 மாநிலங்கள் மற்றும் யுனியன் பிரதேசங்களில் உள்ள 94 தொகுதிகளுக்கு மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதனிடையே நான்காம் கட்ட தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நேற்று நடைபெற்றது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற வரும் திங்கட்கிழமை கடைசி நாளாகும்.

அன்றைய தினம் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என தெரிகிறது.

ஒன்பது மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள 96 தொகுதிகளில் அடுத்த மாதம் 13-ஆம் தேதி நான்காவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய அடுத்த மாதம் மூன்றாம் தேதி கடைசி நாளாகும்.

அதற்கு அடுத்த நாள் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது.

ஆறு மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் உள்ள 49 தொகுதிகளில் ஐந்தாவது கட்டமாக அடுத்த மாதம் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

உத்திரபிரதேசத்தில் 14 தொகுதிகளிலும், மகாராஷ்டிராவில் 13, மேற்குவங்கத்தில் ஏழு, ஒடிஸா, பீகார் ஆகிய மாநிலங்களில் தலா ஐந்து, ஜார்க்கண்டில் மூன்று, ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதியிலும் ஐந்தாம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழகத்திற்கு 682 கோடி ரூபாய் நிவாரண நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதில் மிக்ஜாம் புயல் நிவாரண நிதிக்கு 285 கோடி ரூபாயும், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புகளை சீர் செய்ய 397 கோடி ரூபாயும் வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கர்நாடக மாநிலத்திற்கு வறட்சி மற்றும் இயற்கை பேரிடர் நிவாரண நிதியாக மூவாயிரத்து 454 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று மாலை நடைபெறுகிறது.

இந்த கூட்டத்துக்கு அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே தலைமை வகிக்கிறார்.,

இந்த கூட்டத்தில் அடுத்து நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலுக்கான தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் இறுதி செய்யப்படுகிறது.

[]<<<>>>[]

மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் நரசீனியா கிராமத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மத்திய பாதுகாப்புப்படை வீரர்கள் மீது துப்பாக்கி ஏந்திய சிலர் தாக்குதல் நடத்தியதில் பாதுகாப்புப்படை வீரர்கள் இருவர் உயிரிழந்தனர்.

பலத்த காயமடைந்த வீரர்கள் இருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலை அடுத்து அப்பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

[]<<<>>>[]

அமெரிக்கா – சீனா இடையே இருதரப்பு உறவுகள் குறித்து பெய்ஜிங்கில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

மூன்று நாள் பயணமாக சீனா சென்றுள்ள அமெரிக்கா வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆண்டனி பிளிங்கன், சீன அதிபர் திரு ஸீ ஜின் பிங்-கை, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு வாங் யீ மற்றும் உயரதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பல்வேறு சிக்கல்களுக்கு தீர்வு காண்பது குறித்தும் இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது.

ஹாங்காங்கிற்கு தன்னாட்சி அதிகாரம் வழங்குவது குறித்தும், திபெத்தில் மனித உரிமை மீறல்கள் குறித்தும் விவாதிக்கப்பட வேண்டுமென்று திரு ஆண்டனி பிளிங்கன் கேட்டுக் கொண்டார்.

ரஷ்ய ராணுவத்துக்கு சீனா ஆதரவு அளித்து வருவது குறித்து திரு ஆண்டனி பிளிங்கன் கவலை தெரிவித்தார்.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அந்நாட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் கடந்த மார்ச் மாதம் 24-ஆம் தேதி இரண்டு விசைப்படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றபோது இலங்கை கடற்படையினர் அவர்களை கைது செய்தனர்.

இவர்களை இலங்கை நீதிமன்றம் இம்மாதம் நான்காம் தேதி விடுதலை செய்தது.

பின்னர் அவர்கள் இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு பாஸ்போர்ட். விசா இல்லாததால் இந்திய தூதரகம் 24 மீனவர்களுக்கும் அவசரகால சான்றிதழ் வழங்கியது.

இதனையடுத்து அவர்கள் விமானம் மூலம் சென்னைன அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களை தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்று சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

[]<<<>>>[]

தமிழகத்தில் திருவாரூருக்கு மூன்று புதிய ரயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர சில ரயில்களின் சேவை திருவாரூர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -40--- செகண்ட்*

[]<<<>>>[]

கோடை வெய்யிலின் தாக்கத்திலிருந்து விடுபட்டு சற்று இளைப்பாறுவதற்காக பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் நீலகிரி மாவட்டம் உதகை சென்ற வண்ணம் உள்ளனர்.

இதனால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சரவணன் ) ---50 செகண்ட்*

[]<<<>>>[]

கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இந்திய பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. கிரிதர் அரமானே கலந்து கொண்டார்.

சர்வதேச தீவிரவாதம் குறித்து ஐ நா சபையில் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்ற இந்தியாவின் பரிந்துரையை அவர் வலியுறுத்தி பேசினார்.

இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்ற இந்தியாவின் கருத்தை அவர் எடுத்துரைத்தார்.

அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதில் இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பை பாதுகாப்புத்துறை செயலர் திரு. கிரிதர் அரமானே வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

கடும் வெப்பநிலையை அடுத்து மேற்குவங்கம் மற்றும் ஒடிசா மாநிலங்களில் சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இந்தியா வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் மிக அதிக வெப்பம் இருக்கும் என்று கூறியுள்ளது.

மேற்குவங்கம், பீஹார், ஜார்கண்ட், ஒடிசா, கர்நாடகாவின் உட்பகுதி, ஆந்திரப்பிரதேச கடலோரப் பகுதி மற்றும் ஏனாமில் வெப்பநிலை அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளது.

எனினும் நாட்டின் மத்தியப் பகுதி, வடமேற்குப் பகுதிகளில் நாளை வரை லேசான மழைக்கு வாய்ப்பிருப்பதாக அந்த மையம் கூறியுள்ளது.

தமிழ்நாடு, கேரளா, திரிபுரா, அசாம், மேகலயா உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த 2 நாட்களில் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவின் ஷாங்காயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் குழு பிரிவில் இத்தாலியை 236 – 226 என்ற புள்ளி கணக்கில் இந்தியா வென்றது.

ஆடவர் குழு பிரிவில் நெதர்லாந்தை 238 – 231 என்ற புள்ளி கணக்கில் இந்தியா வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் யஸ்தோனியாவை 158 – 157 என்ற புள்ளி கணக்கில் இந்தியா வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

தில்லியில் பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்க உள்ள போட்டியில் தில்லி அணி — மும்பை அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இரவு மணி 7—30- க்கு தொடங்கும் மற்றொரு ஆட்டத்தில் லக்னோ — ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

[]<<<>>>[]

தாமஸ் மற்றும் உபர் கோப்பைகளுக்கான பேட்மிண்டன் போட்டி இன்று சீனாவின் chengdu-வில் இன்று தொடங்கியது.

உபர் கோப்பைக்கான முதல் ஆட்டத்தில் இந்தியா — கனடா இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் இரண்டுக்கு — பூஜ்ஜியம் என்ற ஆட்டக்கணக்கில் இந்தியா முன்னிலையில் உள்ளது.

தாமஸ் கோப்பைக்கான முதல் ஆட்டத்தில் இந்தியா — தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 3-30-க்கு தொடங்குகிறது.

*End of News*